# இலிங்க புராணத்தினூடாகப் புலப்படும் சைவசித்தாந்தக் கருத்துக்கள்

**செல்வி. துஹாயா. பேரானந்தம்,**
*விரிவுரையாளர்,*
*இந்துநாகரிகத்துறை,*
*இந்துக்கற்கைகள் பீடம்,*
*யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.*
*இலங்கை.*
**(தற்போது, முதுகற்கைநெறி மாணவி, காசி இந்துப் பல்கலைக்கழகம், வாரணாசி, உத்தரப்பிரதேசம், இந்தியா)**

**ஆய்வுச்சுருக்கம்**

*புராணங்கள் சைவக் கருவூலங்களாக திகழும் சிறப்பினையுடையன. சைவப் பண்பாட்டின் பல்வேறு பரிமாணங்களை விரித்துரைக்கும் நூல்களாக விளங்குகின்றன. சைவத்தின் முடிந்த முடிவான தத்துவம் சைவ சித்தாந்த தத்துவமாகும். சைவ சித்தாந்த தத்துவ மரபு மிகவும் தொன்மை வாய்ந்ததாகும். இதன் கூறுகளை சிவாகமங்களிலும் திருமுறைகளிலும் காண முடிகின்றது. புராணங்களானவை தெய்வீகக்கதைகளினூடாக சைவசித்தாந்த தத்துவக் கருத்துக்களை இலகுவாக எடுத்தியம்பியுள்ளன. வடமொழிப் புராணங்கள், தமிழ் மொழி புராணங்கள் என்ற கட்டமைப்பில் வடமொழிப்புராணங்களில் இருக்கின்ற சிவபுராணம் பத்தினுள் ஒன்றுதான் இலிங்க புராணமாகும். இலிங்கபுராணமானது 'சைவபுராணம்' என சிறப்பிக்கப்படுவதனால் அதில் சைவத்தின் முடிந்த முடிவாகிய சைவசித்தாந்த தத்துவ கருத்துக்கள் விரவிக்கிடப்பதனைக் காணலாம். இந்த வகையில் ஸ்ரீ லிங்க புராணத்தினை முதன்மை மூலாதாரமாகக் கொண்டு அந்தப் புராணம் புலப்படுத்தும் சைவ சித்தாந்தச் சிந்தனைகளை வெளிப்படுத்துவது இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வானது விபரண ஆய்வு, வரலாற்று ஆய்வு முறையில் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. சைவ சித்தாந்த சாஸ்திரங்களுடனும் ஏனைய சைவ நூல்களுடனும் ஒப்பிட்டு ஆராய்வதினால் ஒப்பிட்டு ஆய்வு முறையியலும் பயன்படுத்தப்பட உள்ளன.*

**திறவுச்சொற்கள்:** *இலிங்க புராணம், சைவ சித்தாந்தம், சிவன், சைவம், முப்பொருள்.*

**முன்னுரை**

இந்துசமய இலக்கிய வரிசையில் புராணங்கள் முக்கியத்துவமுடையவையாகின்றன. வேதாகமங்களையன்றிச் சிவபரத்தைப் பேசும் புராண இதிகாசங்களும் சைவத்துக்குப் பிரமாண நூல்களாகவே அமைந்து விளங்குகின்றன. எனவே இவ்வேதங்கள், உபநிடதங்கள் போலன்றிப் புராணங்கள் தத்துவ உண்மைகளை மக்கள் எளிதில் விளங்கிக்கொள்ளுமாறு எளிய நடையில் கூறுவன. சைவசித்தாந்திகள் வேதங்களை ஆப்தப் பிரமாணமாக ஏற்றுக்கொண்டனர். இவ்வேதங்களின் இறுதி தத்துவப் பகுதியாக விளங்கும் உபநிடத சிந்தனைகளே சைவத்தின் முடிந்த முடிவான தத்துவக் கொள்கையான சைவசித்தாந்தத்தின் தோற்றத்திற்கு ஊன்றுகோளாகும். வேதஉபநிடதங்களில் மறைந்து கிடக்கும் உண்மைகளையும் இலட்சியங்களையுமே புராணங்கள் வெளிக்கொண்டு வந்து விளக்குகின்றன. ஆகவே இப்புராணங்களில் சைவசித்தாந்த சிந்தனைகளின்எண்ணக்கருக்கள் அமையப் பெற்றிருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

**இலிங்க புராணம் அறிமுகம்**

பல்வேறு யுகங்கள் தோறும் வழக்கிலிருந்து வந்த புராணங்களை தொகுத்து பதினெண்புராணங்களாக உலகிற்களித்தவா் வேத வியாசரேயாவார். வியாச முனிவா் அருளிய பதினெண் மகாபுராணங்களில் சைவ சமய முழுமுதற்கடவுளான சிவபெருமானின் பெருமைகளை உரைக்கும் புராணங்கள் சிவபுராணங்களாகும். இச் சிவபுராணங்கள் பத்தினுள் ஒன்றே இலிங்க புராணமாகும்.

இலிங்க வழிபாட்டின் மேன்மையைக் கூறும் இந்த இலிங்க புராணத்தை சூதா், நைமிசாரணயத்து முனிவா்களுக்கு உபதேசித்ததாகக் கூறப்படுகின்றது. இப்புராணம் கி.பி ஏழாம் நூற்றாண்டிற்கும் பத்தாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இயற்றப் பெற்றதாக ஆய்வாளா் கூறுவா். இது பூா்வ பாகத்தில் 108 பாடல்களையும் உத்தரபாகத்தில் 55 பாடல்களையுமுடையதாகவும் 163 அத்தியாயங்களையுமுடையதாகவும் விளங்குகிறது. இலிங்க புராணம் பதிப்புகளிலே சுமாா் 9000 பாடல்கள் இடம் பெறுகின்றன. இதில் உத்தரபாகம் பிற்பட்ட சோ்க்கை என்றும் ஆய்வாளரிடைய கருத்து நிலவுகின்றது.

சிவபெருமானுக்கு அருவம்,அருவுருவம், உருவம் என மூன்று வடிவங்கள் கூறப்பட்டுள்ளன. இவை முறையே நிஷ்களம், சகளநிஷ்களம், சகளம் எனச் சாத்திரங்கள் கூறுவன. இவற்றிலே அருவுருவமான வடிவம் சதாசிவம் என்றும் வழங்கப்படும். இதுவே **சிவலிங்கவடிவ**மாகும். இதனைச் **'சோதி சொரூபம்'** என்றும் கூறுவா். **'லிங்' ஒடுக்கத்தையும் 'கம்' தோற்றத்தையும்** உணா்த்துவதால் **இலிங்கவடிவம் ஒடுக்கத்தையும் தோற்றத்தையும் சுட்டுமென்பா்** சிலா்.**'லிங்க' சித்திரித்தல் எனக் கொண்டு படைத்தல் முதலியவற்றால் உலகைச் சித்திரிப்பதாகிய பரமேசுவரம் பிரபாவம் லிங்கம்** என்றும் கூறுவா்.

இலிங்க புராணமானது சிவலிங்கத்தின் பெருமையும், பதினோர் உருத்திரர்கள், சிவவழிபாட்டு விபரங்கள், சிவத்தோத்திரங்கள், இரு சிவ சகஸ்ரநாமப்பட்டியல்கள், இரு வேறுபட்ட சிவ மூர்த்த பட்டியல்கள் ,சிவ மகிமை உணர்த்தும்நிகழ்ச்சிகள்,பஞ்சாட்சரி மந்திரம், கோயில்,கோயில் வழிபாடு,தெய்வ பிரதிட்டையும் வழிபாடும், இலிங்க பிரதிட்டையும் வழிபாடும், தத்துவங்கள் (அத்வைத வேதாந்தம், சாங்கியம், யோகம், பாசுபதம்) என்பனவற்றை உட்கிடக்கைகளாகக் கொண்டுள்ளது.

இலிங்க புராணம் அடிப்படையில் சிவனுடைய புராணமாகக் காணப்படுவதானால் இப்புராணத்தில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் விரவியிருக்கக் காணலாம். இலிங்கபுராணம் என்பது ‘சைவபுராணம்’ என சுட்டப்படுகின்றமையும் இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது. சிவ பெருமானைக் குறித்தும் அவரது வடிவங்களைப் பற்றியும் பல ஸ்லோகங்கள் விவரிக்கின்றது.

**பதி**

முப்பொருள் உண்மை பேசும் நெறியாகச் சைவ சித்தாந்தம் விளங்குகின்றது.பதி, பசு, பாசம் எனும் முப் பொருளில் பதியுண்மை முதன்மைக்குரியதாகும். அதாவது பதியாகச் சிவத்தை எடுத்தாள்கின்றது. சிவம் முழுமையான, நிறைவான உண்மைப்பொருளாக எடுத்தாளப்படுவதுடன் வழிபாட்டிற்குரிய தன்னிகரில்லாக் கடவுளாகவும் போற்றப்படுகின்றார்.இவ்வகையில் இறைபற்றிய எண்ணக்கருத்தானது தத்துவ நிலைக்கும் சமய நிலைக்கும் பொருந்தும் வகையில் இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது.

**சொரூப நிலை**

இலிங்கபுராணமானது சிவனை சொரூபநிலையில் குணங்குறிகள் கடந்தவராகக் காணுகிறது. அதாவது இறைவனுக்கு குணம் குறி எதுவும் பேசப்படாத, ஆன்மாக்களையும் பிற பொருட்களையும் நோக்கது தன் சுய சொரூபத்தினை காட்டுகின்ற பேரொளிப்பிழம்பாக காட்டுகிறது. இந்நிலையில் சொரூப நிலைக்குரிய பரமசிவன் முழுநிலை சார்ந்த தத்துவ உண்மைப் பொருளாய் குணாதீதத்திற்குரியவனாய் எழுத்தாளப்படுகிறார். பரம சிவன் ஒப்பிட்டு விளங்குதற்கு அப்பாற்பட்டு உவமை கடந்தோனாய் உள்ளான். இதனாலேயே,

**“பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருள்**
**பேற்றின் அருமைக்கும் ஒப்பின்மையான்**”

**(திருவருட்பயன்: பாடல்.03)**

எனத் திருவருட்பயன் ஒப்பீட்டிற்கு அப்பாற்பட்டமையைச் சுட்டி நிற்கின்றது. எல்லாவற்றையும் கடந்து நிற்கும் நிலை சொரூப நிலையாகும். இதனை,

“**விண்ணிறைந்து மண்ணிந்து மிக்காய் விளங்கொளியாய்**
**எண்ணிறந்தெல்லையிலாதானே”**

**(திருவாசகம்/சிவபுராணம்: பாடல் வரி.23,24)**

என இலிங்கபுராணம் செப்பும் சிவனின் ஒளிப்பிழம்பான காட்சியினை அல்லது சொரூப நிலையினை மாணிக்கவாசகரும் குறிப்பிட்டுள்ளார்.

**தடத்த நிலை**

சொரூப நிலையில் சிவன் தத்துவ உண்மைப் பொருளாய் எடுத்தாளப்படுகின்றார். தடத்த நிலையில் சிவன் குணவியல்புகளுடன் கூடியவராய் உருவ, அருவ, அருவுருவத் திருமேனிகள் தாங்கியவராய் வழிபாட்டிற்குரிய தெய்வமாய் உணர்ந்தறிதற்கெளியனாய் விளங்குகின்றான். இலிங்க புராணமானது சிவனின் அருவுருவத்திருமேனியான இலிங்க வடிவப் பெருமை பற்றி விபரிக்கின்றது.

“**பேரொளியாய் விளங்குமும் ஜோதி**
**சொரூபம் சிவம் அந்த ஜோதி லிங்கத்திலிருந்து**
**அனைத்துலகுக்கும் ஆதாரமானதும் வேதங்கள் கொண்டதுமான**
**லிங்கம் உண்டாயிற்று”**

**(பதினெண்புராணங்கள்: ஸ்ரீலிங்கபுராணம்,ப.172)**

சிவலிங்கத் தோற்றம் குறித்து தத்துவத்தினை சேக்கிழார்,

**“காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்”**

**(12ம் திருமுறை, திருமலைச்சருக்கம். பாடல்.07)**

என்கிறார்.

திருமந்திரத்திலும் சிவலிங்கத்தத்துவம் குறித்து பல்வேறு கருத்துகள் உள்ளன **கண்களால் காணக்கூடிய உருவம், காணமுடியாத அருவம் என்ற இரு நிலைகளுக்கும் இடைப்பட்ட அருவுருவத் தன்மையையே சிவலிங்கத் தோற்றம் என்பவை உணர்த்துகிறது** திருமந்திரம். சைவத்திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக விளங்கும் திருமந்திரமே சைவசித்தாந்தம் என்ற சொல்லாட்சியினை கையாண்டுள்ளமை இங்கு மனங்கொள்ளத்தக்கது.

இறைவன் தடத்த நிலையில் நாமம்,ரூபம், தொழில் கொண்டோனாய் விளங்குகின்றார். இலிங்கபுராணமும் ஈசனுக்கு பற்பல உருவங்களை போதிக்கின்றது. இதனையே மாணிக்கவாசகர்,

**“ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம்**
**திருநாமம் பாடி நாம் தெள்ளோணம் கொட்டாமே”**

**(8ம் திருமுறை,திருவாசகம், திருத்தெள்ளேனம்.பாடல். 01)**



© 2025, IRJTSR 

என திருவாசகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வாயிகலிங்கம், சோமாஸ்கந்த மூர்த்தி, ஏகபாதமூர்த்தி, யஞ்ஞதேவன், ரிஷபாமூர்த்தி நடராஜர் என்பனவற்றுடன் ஈசன் கொண்ட பஞ்ச தோற்றங்கள் சத்தியோசாதம், வாம தேவம், தத்புருஷம், அகோரம், விஸ்வரூபம் என்பனவும் கபாலம் கொண்ட உரு,சுடுகாட்டில் ஆடும் நடன உருவம், ஜலந்தாரசுரவத மூர்த்தி, கால சம்ஹார மூர்த்தி, திரிபுரதகன மூர்த்தி, கிரகமூர்த்தி, அனுக்கிரக மூர்த்தி, சப்தகன்னியர் அனுக்கிரகமூர்த்தி, துர்க்கானுக்கிரக மூர்த்தி, ஜோதிலிங்க மூர்த்தி, தஷிணா மூர்த்தி பைரவ மூர்த்திபோன்ற ஈசனது தடத்த வடிவங்களை இலிங்கபுராணம் வரிசைப்படுத்தியுள்ளது.

**உலகத்தோற்றம்- மாயை**

சைவசித்தாந்திகள் 'மாயை' காரணமாக, காரியமாகிய பிரபஞ்சம் தோன்றி மறைகின்றது என விளங்குவர். இதனை அருணந்தி சிவாச்சாரியார்,

**"தோற்றமும் ஈறும் மாயையின் தொழில் தென்றோ**
**சாற்றிரும் உலகம்"**

**(சிவஞான சித்தியார்: பாடல் 34)**

என விளக்குகின்றார்.

இப்பிரபஞ்ச உருவாக்கத்தத்துவம் சைவசித்தாந்தம் கூறும் பிரகிருதி மாயாதத்துவங்களுடன் ஒப்ப நோக்கக்காணலாம். அதாவதுஇறைவன் மாயைக் கொண்டு சிருஷ்டிகளை வகுத்தார் என கூறி நிற்கின்றது. பிரகிருதித் தத்துவமே ஒளிப்பிழம்பாய் லிங்கமாய் மாறியது. சிவனே அந்த லிங்கமாகி நின்றான். படைத்தல் தொழிலில் பிரம்மா, விஷ்ணு இருவரில் யார் பெரியவர் எனும் போட்டி ஏற்பட்ட வேளையில், அவர்கள் எதிரில் ஓர் ஒளிப்பிழம்பு தோன்றியது. அனற்பிழம்பாக ஜோதிலிங்கம் தோன்றியது இருவரும் வணங்கினர்.

அகந்தையினால் அதன் அடிமுடி தேடி இருவரும் சென்று களைத்துத் திரும்பினர். அப்போது ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்ற ஐந்து முகங்களுடன் சடையில் பிறைச் சந்திரன் கைகளில் மான் மழுவேந்தி சிவ பெருமான் தரிசனம் அளித்தார் என இலிங்கபுராணம் குறிப்பிட்டுச் சென்றுள்ளது.

பஞ்ச பூதங்களின் தோற்றத்தை சித்தரிக்கும் போது,"லிங்க உருவெடுத்த சிவனின் ஏவலாய் மாயையிடம் இருந்து மகத்துவம் உண்டாயிற்று. அதனிடமிருந்து முக்குணங்களோடு கூடிய அகங்காரம் உண்டாயிற்று. தாமசம் எனப்பட்ட அகங்காரத்தினிடமிருந்து ஒலி எழுந்தது. பேரொளியிடமிருந்து ஆகாயமும் அதிலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் உண்டாயின. வைகாரிகம் எனப்பட்ட அகங்காரத்தினிடமிருந்து இந்திரியங்களுக்கு அதிஷ்டான தெய்வம் உண்டாயிற்று. தைஜசம் என்னும் அகங்காரத்தினிடமிருந்து ஞானேந்திரியங்கள் ஐந்தும், கர்மேந்திரியங்கள் ஐந்தும் மனமும் உண்டாயின." என்கிறது. தத்துவங்கள் ஓர் அண்டமாகி பிரளய நீரில் மிதந்து கொண்டிருக்கையில் அதற்கு உயிர் உண்டாகி அதில் பிரம்மன் தோன்றுவார். அவரே **அயன், அரி, அரன்** என்று படைத்தல், காத்தல், அழித்தல் என்ற காரியங்களுக்கேற்ப அழைக்கப்படுகின்றார். பிரமாண்டத்தினிடையே பதினான்கு லோகங்களும் அடங்கியுள்ளன. அகங்காரத்தை மகத்துவம் சூழ்ந்திருக்கும். அதனைப் பிரகிருதிபுருஷன் தன்னிடம் லயம் கொண்டிருப்பான் பிரளயத்தின் முடிவில் மூவரும் ஒன்றாக ஐக்கியமாகிவிடுவர் **(ஸ்ரீ லிங்க புராணம்: ப.172).**

இறைவன் ஆன்மாவோடு தொடர்புடைய அந்தக் கரணங்கள், ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் என்பவற்றுடன் விளங்குவது போல உலகத் தோற்றத்திற்கும் காரணகர்த்தாவாகத் திகழ்கிறார்."சப்த தன் மாத்திரையை ஈசானர் தோற்றுவிக்க அதிலிருந்து ஆகாயம் உண்டாகிறது. ஸ்பரிச தன் மாத்திரையை தத்புருஷன் உண்டாக்க அதிலிருந்து காற்று தோன்றுகிறது. ரூப தன் மாத்திரையை அகோரன் ஏற்படுத்த அதிலிருந்து நெருப்பு உண்டாகிறது. ரச தன் மாத்திரையை வாமதேவன் படைக்க நீர் உண்டாகியது. சத்தியோஜாதன் தந்த தன் மாத்திரையைப் படைத்து அதிலிருந்து ஆழி சூழ் உலகை உண்டாக்கினார்." என்றவாறு இருபத்தைந்து தத்துவங்களிலும் பஞ்ச பிரம்ம சொரூபியாக (ஈசானர், தத்புருஷன், அகோரன், வாமதேவன், சத்தியோஜாதன்) சிவன் விளக்குகிறார். அதாவது சைவசித்தாந்தம் கூறும். பிரகிருதி மாயைத் தத்துவமான ஐம்பூத தத்துவத்தையும் தன் மாத்திரை தத்துவத்தையும் இலிங்க புராணம் விளக்கியுள்ளது.

**சிவ சக்தி ஐக்கியம்**

பிரபஞ்சக் காரியங்கள் நடைபெறுவதற்குக் காரணமே சிவசக்தியாகும். அதனால்தான் சித்தாந்திகள் அருட்சக்திக்கு அவ்வளவு முக்கியத்துவம் அளித்துள்ளனர். இதனை இலிங்கபுராணம்,

**"பழுதிலாது உறையும் பரம் பொருளே சிவன்,மாயையே தேவி. சிவனே ஆதிபுருஷன், தேவியே பிரகிருதி. புருஷராக ஈசன் விளங்குகிறார், கௌரியே பெண்ணாகத் திகழ்கின்றார். பொருள் இறைவன் என்றால், அதனை எடுத்துக்கூறும் சொல்லே உமையாள். பகல் இறை எனில், இரவெல்லாம் கௌரியாகும்"**

**(ஸ்ரீ லிங்க புராணம்: ப.273)**

என சைவ சித்தாந்தம் கூறும் சிவ சக்தி ஐக்கியத்துடன் தொடர்புபடுத்தி,அனைத்துமே ஈசன், தேவி சொரூபமாக விளங்குகிறது எனவும்ஈசனை உமையோடு சேர்த்தே வழிபட வேண்டும் எனவும் அப்போதுதான் உய்யும் வகை உண்டாகும் எனவும் காட்டுகிறது.

**பசு**

சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களில் இறைவனை அடுத்து பௌதிக அதீத வஸ்துவாக உள்ளது உயிராகும். பதியாகிய சிவம் சித்துத் தன்மையதாகவும் பாசம், அசத்துத் தன்மையதாகவும் விளங்குகின்றன. பசு சத்துப் பொருளான சித்தினை அல்லது சடமான அசத்தினைச் சார்ந்து விளங்கும்தகையை உடையதாக சத்தாக சுட்டப்பெறுகிறது. இதனை,

**''சத்தசத்தைச் சாரா தசத்தறியாதங்கனிவை**
**உற்ற சத சத்தாமுயிர்''**

**(ஸ்ரீ லிங்க புராணம்: ப.187)**

என்கிறது திருவருட்பயன். இலிங்கபுராணம், " கர்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள், சித்தம்,புத்தி, மனம், அகங்காரம் ஆகியவற்றை உடைய ஆத்மா ஜீவாத்மா எனப்படும்" என்கிறது.**(ஸ்ரீ லிங்க புராணம்: ப.187)** ஜீவன் **உற்பிசம், சுவேதசம், சராயுசம், அண்டசம்** எனப்படும் நால்வகை பிறப்புக்களுக்குள் உட்படுகிறது.**(ஸ்ரீ லிங்க புராணம்: ப.186)**

இலிங்கபுரணம் வையகத்திலும் சகல உயிர்களும் பசுக்களாகிய மாயையாகிற கயிற்றால் பிணைக்கப்பட்டுள்ளனர் மெஞ்ஞானத்தால் இறைவனைத் தொழுதால் வினைக்கயிற்றை நீக்கி இறைவன் அருள் புரிவார் என்கிறது.**(ஸ்ரீ லிங்க புராணம்: ப.271)** பஞ்சேந்திரியங்களும் பூஞ்ச பூதங்களும் தன் மாத்திரைகளும் முக்குணங்களுமே நம்மைப் பிணைந்திருக்கின்ற பாசம். இந்தப் பாசம் அறுபட்டால் பசுக்கள் தன்மையிலிருந்து உயிர்கள் விடுபடும்.

முத்தொழில் புரிய அருளும் அம்மையை இடமாகக் கொண்ட உமாபதி பஞ்ச பிரும்மமாய் தோற்றம் கொண்டு விளங்குகிறார் என இலிங்கபுராணம் கூறும்போது, சைவசித்தாந்தம் கூறும் நம் உடலில் இயக்கக் கூறுகள் 36ல் சிலவற்றைக் கூறிநிற்கிறது.

1. **ஈசான பிரும்மன்** - சகல உயிர்களிலும் ஆன்மாவாக இருந்து கர்மாக்களின் பலன்களை அனுபவிப்பவராக விளங்குவது.
2. **தத்புருஷ பிரும்மம்** - இச்சைகொள்ளும் வகையில் ஆன்மாவை மறைக்கும் பிரகிருதியாகிய ஈசன் சொரூபம் இது.
3. **அகோர பிரும்மம்** - புத்தி வடிவிலே தேகத்தில் உறையும் ஈசன் சொரூபம் இது.
4. **வாமதேவ பிரும்மம்** - அகங்கார வடிவமாக இருப்பது.
5. **சத்யோஜாத பிரும்மம்** - மனம்.

இங்கு மனம், புத்தி, அகங்காரம் எனும் அந்தக்கரணங்களை ஆன்மாவோடு தொடர்புடையதாக சைவசித்தாந்த தத்துவம் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் செவி இந்திரியமாக ஈசானன் விளங்குபவர்,''த்வக்'' என்னும் தோல் இந்திரியமாக தத்புருஷன் உறைகின்றார். கண் இந்திரியமாக அகோரனும், நாக்கு இந்திரியமாக வாமதேவனும் விளங்குகின்றனர். சத்தியோஜாதர் மூக்கு இந்திரியமாக விளங்குகின்றார். இவ்விதம் ஞானேந்திரியங்கள் ஐந்திலும் பஞ்ச பிரும்மமாக விளங்கும் இறைவன் கர்மேந்திரியங்கள் ஐந்திலும் அவ்வாறே திகழ்கின்றார். அழியாது உறையும் பரப்பிரம்மம் ஆன்மாவே. இது சைவசித்தாந்தம் பேசும் ஆன்ம தத்துவதுடன் தொடர்புடையது என்பது குறிப்பிடத்தக்கது. இதனை இலிங்கபுராணமானது''சதசற்பதி'' என்கிறது. அதாவது சத்தாகி (ஆன்மா) அசத்தாய் (தளை) அவற்றின் பதியாகி உறைதலால் சிவனை சதசற்பதி என விளக்கம் கூறிச் சென்றுள்ளது.

**தளை**

தளை என்பது உயிர்களைச் சுட்டிநிற்கும் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களைக் குறிக்கும். தக்கன் தன் மகள் சதியை ஈசனுக்குத் திருமணம் செய்த வைத்தான். ஈசனின் இந்திராதி தேவர்கள் வணங்குவதால் மருமகனாகிய ஈசன் தன்னை வணங்கி கௌரவிப்பதில்லை என்று அவன் ஆணவம் மேலீட்டால் ஈசனை தான் நடாத்திய யாகத்திற்கு அழைக்காதுவிட்டான். இறுதியில் ஆணவமழிந்து சிவனை வணங்கி கணங்களின் தலைவனானான். ' ஜீவன் அன்னை வயிற்றில் தோன்றி இறக்கும் வரையில் துன்பமே அடைகின்றது' எனவும் ' ஜீவன் நால்வகைப்பிறவிகளை **(உற்பிசம், சுவேதசம், சராயுசம், அண்டசம்)** எடுக்கின்றது' எனவும் கன்மம் பற்றி குறிப்பிட்டுச் சென்றுள்ளது.**(ஸ்ரீ லிங்க புராணம்: ப.187)** ' மாயையை அறிந்தோன் பற்றற்று தன்னைக் காத்து கொள்வான்'' எனவும் மாயை பற்றிய சிந்தனைகளையும் பதிவு செய்துள்ளது.**(ஸ்ரீ லிங்க புராணம்: ப.188)**

**உயிர் முத்தியடைவதற்கான மார்க்கங்கள்**

சைவசித்தாந்த தத்துவத்தில் உயரிய நோக்காகவும் உன்னத இலட்சியமாகவும் அமைவது முக்தி நிலையாகும். சைவசித்தாந்திகள் உயிரானது மலங்களிலிருந்து விடுபட்டு இறையினைச் சாரல் என்பதனை முக்திநிலையாகக் கொள்கிறார்கள்.

**"…. சிவனடியைச் சேரும் முத்தி**
**செப்புவது இங்குயாமே''**

**(சிவஞானசித்தியார்,சுபக்கம்,ப.264)**

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

என்கிறது சிவஞானசித்தியார்.

இலிங்கபுராணமானது சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்களின் வழி இறைவனை அடையமுடியும் என்கிறது.

1. ஈசனுக்கு கோயில்கள் அமைப்போர் நல்லகதி அடைவர். (சரியை)**(சிவஞானசித்தியார்,சுபக்கம்,ப.146)**

2. சிவாலயங்களைத் தினமும் பெருக்கி பசும் சாணத்தால் மெழுகி, கோலம் இட்டவர் ஆயிரம் சாந்திராயனம புரிந்த பலனை அடைவர். (சரியை)**(சிவஞானசித்தியார்,சுபக்கம்,ப.146)**

3. பக்தியுடன் ஈசனைப் பூஜித்து அவன் தாள் பணிவோர் தேவலோகத்தில் அமரர் வணங்கிட இந்திரனாக அமர்ந்திருக்கும் பேறுபெறுவர் (கிரியை)**(சிவஞானசித்தியார்,சுபக்கம்,ப.148)**

4. பக்தியுடன் அர்ச்சித்து தூபதீபங்கள் நல்கி இணையடித் தாமரைகளைத் தொழுதோர் பிறவிப் பெருங்கடலை நீந்தி ஈசன் திருவடி நிழலை அடைவார்.**(சிவஞானசித்தியார்,சுபக்கம்,ப.149)**

5. அலைபாயும் உள்ளத்தைக் கட்டுப்படுத்தி ஒரு நாளிகையாவது ஈசன் திருவுருவிலே மனத்தைச் செலுத்தி அவரை வணங்கி வழிபடுவோர் சிவனுலகை அடைவர். யோகத்தின் மூலம் அழியாப் பேரின்ப வாழ்வினை அடையலாம். (யோகம்)**(சிவஞானசித்தியார்,சுபக்கம்,ப.141, 187)**

6. உயர் ஞானம் பெற்றார் இரு வினைகள் ஒழிந்து விளங்குவார். எனவே, பிறவாப் பேரின்ப முக்தியை அடைய விரும்புவோர் முதலில் தெளிந்த ஞானத்தைப் பெறுவதையே முயற்சிக்க வேண்டும். தெளிந்த ஞானமுடையவனுக்கு வேறு உடல் வராது. முக்தியே சித்திக்கும். ஞானத்தை சிறந்த தியானத்தால் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும். (ஞானம்) **(சிவஞானசித்தியார்,சுபக்கம்,ப. 187)**

இதனையே சிவஞானபோதம்,

**"...... மாலற நேயம் மலிந்தவர் வேடமும்**
**ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"** **(சிவஞானபோதம்:பாடல்.12)**

என எடுத்துரைக்கின்றது.

**பஞ்சாட்சரமந்திரமும், வீடுபேற்றுக்கு குருவின் அவசியமும்**

குருவின் வழிகாட்டலில் திருவைந்தெழுத்தினை ஓதினால் மும்மல நீக்கம் பெற்று முத்திக்கு அது துணையாகும். இதனை சிவப்பிரகாசம்,

**".... அந்தமாதிகள் இலாத அஞ்செழுத்து அருளினாலே...."**
**(சிவப்பிரகாசம்:பாடல்.90)**

எனும் பாடலால் விளக்குகிறது. இலிங்க புராணம் ஈசன் திருவுருவை மனதிலிருந்து பஞ்சாட்சர மந்திரத்தை ஓதவேண்டும் எனவும் பஞ்சாட்சர ஜபம் குருமூலமாக உபதேசம் பெறவேண்டும் எனவும் கூறுகின்றது.

**"இறைவன் திருவுருவைத் தெளிந்த மனத்தினில்**
**தியானித்து, பஞ்சாட்சரம் ஜபிப்பவர்கள்**
**வல்வினைகள் அனைத்தும் பொடிபட**
**இறைவன் பூங்குழல் பாதம் பொருத்துவர்"**
**(ஸ்ரீ லிங்க புராணம்:ப.162)**

**"பஞ்சாட்சரம் பதினாயிரம் முறை**
**ஜபித்தால் செய்த பாபங்கள் அனைத்தும் தீர்ந்துவிடும்"**
**(ஸ்ரீ லிங்க புராணம்:ப.162)**

ஈசன் ஐந்தெழுத்தின் மகிமையை தேவிக்கு உரைத்தார். " சிருஷ்டிக்காகத் தோற்றுவிக்கப்பட்ட பிரமன் படைக்கும் சக்தி அடைய என் அருள் வேண்டி என்னைத் துதி செய்ய, வேதங்களும் போற்றி வணங்கும் பஞ்சாட்சரத்தை அவனுக்கு என் ஐந்து முகங்களாலும் உபதேசம் செய்ய, பிரமன் சகல ஞானமும் பெற்று படைக்கத் தொடங்கினார்" **(ஸ்ரீ லிங்க புராணம்:ப.186).**

சாலோகம், சாமீபம், சாரூபம் என்பன முறையே சிவ உலகத்தையடைதல், சிவனை அண்மித்தல், சிவ உருவத்தைப் பெறுதல் எனும் பொருளைச் சுட்டுவதாகும். சாயுச்சியம் என்பது சிவனுடன் இரண்டறக்கலத்தலைசச் சுட்டிநிற்கிறது. இதனையே அருணந்தி சிவாச்சாரியார்,

**"ஒன்றாகாமல் இரண்டாகாமல்**
**ஒன்றும் இரண்டும் இன்றாகாமல்"**
**(இருபா இருபது,பாடல் 20 9-13)**

என்கிறார். திருவருட்பயனும் ஆன்மாவும் இறைவனும் இரண்டறக்கலந்து நிற்கும் முத்தி நிலையைத் தாள் எனும் உதாரணத்தால் விளக்கி நிற்றல் காணலாம்.

**"தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்**
**கூடலை நீ யேக மெனக் கொள்"**
**(திருவருட்பயன்:குறள் 8-4)**

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR

இதனைத்தான் இலிங்கபுராணம் அனுசரிக்க வேண்டிய ஆசாரவிதிகளாக எண்வகை விதிகள் கூறும்போது பிறப்பொடு இறப்பு நீக்கல் சாயுச்சம் எனச் சுட்டி நிற்கக் காணலாம். அதாவது ‘‘அணிமா, லகிமா, மகிமா, பிராத்தி, பிராகாமியம்,ஈசத்துவம், வாசித்துவம், சாயுச்சியம் ஆகிய எண்வகை சித்திபெற்றவர் முக்தி பெறுவர் என சுட்டுகிறது.

எனவே தொகுத்து நோக்குகையில் சைவத்தின் முடிந்தமுடிவான சைவ சித்தாந்தத்தின் அநேக சிந்தனைகள் சைவபுராணங்களில் (சிவ புராணம்) ஒன்றாகத் திகழும் இலிங்கபுராணத்தில் அதிகம் இழையோடிக்காணப்படுகினறமை குறிப்பிடத்தக்கது.

## உசாத்துணை நூல்கள்

[1] இந்துக்கலைக்களஞ்சியம், பகுதி I,(அ-ஈ),(1990), இந்துசமய இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
[2] கார்த்திகேயன், (1969), ஸ்ரீ லிங்கபுராணம், வாசுபிரசுரம், சென்னை.
[3] கிருஷ்ணமாச்சாரியார், (2013), அஷ்டா தசபுராணங்கள் என்னும் பதினெண் புராணங்கள், நர்மதா பதிப்பகம்,சென்னை.
[4] சுகந்தினி.சி., (2020), இலங்கை சைவத் தலபுராணங்கள் ஒரு பண்பாட்டியல் ஆய்வு, கரிகணன் நிறுவனம், யாழ்ப்பாணம்.
[5] ஞானகுமாரன்.நா., (2012), சைவசித்தாந்தத்தெளிவு, தூண்டி, யாழ்ப்பாணம்.
[6] நமசிவாயம்.இ., (1997), சைவசித்தாந்தம் கூறும் தத்துவங்களும் தாத்துவிகங்களும், அண்ணாசலை, சென்னை.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்